**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 25.11.2025**
**OS. No. 27/2015 and OS.No.122/2015**
**வழக்கு சாட்சி DW.4–திருநீலகண்டன் , த/பெ.கிருஷ்ணன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் BA படிப்பை பாதியில் நிறுத்திவிட்டேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை ஏதேனும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதி இந்திராணி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம். நான் சீராமணியூரில் குடியுள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் சீராமணியூர் கிராம ஊர் கவுண்டரா என்றால் ஆமாம். நான் ஊர் மக்களிடையே பஞ்சாயத்து செய்து வைப்பேனா என்றால் செய்து வைப்பேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கின் தரப்பினர்களான இந்திராணி, குணசேகரன், சந்திரசேகரன் ஆகியோர்களிள் யாரேனும் பஞ்சாயத்து பேசி வைக்குமாறு கேட்டார்களா என்றால் இல்லை. 2015ல் இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு அவர்கள் பஞ்சாயத்து ஏதேனும் பேசி வைக்க சொன்னார்களா என்றால் பிரதிவாதி இந்திராணி பேசி வைக்க சொன்னார். அது தொடர்பாக பஞ்சாயத்து ஏதேனும் பேசினேனா என்றால் தரப்பினர்கள் யாரும் வரவில்லை, அதனால் பேசவில்லை.

2) சண்முகத்தின் முதல் மகன் தான் கோவிந்தராஜ் என்றால் சரிதான். கோவிந்தராஜ் ஆடு வாங்கி, விற்கும் தொழில் செய்து வந்தார். பெரிய கவுண்டர் என்பவர் யார் என்றால் சண்முகத்தின் இரண்டாவது மனைவியான வெள்ளையம்மாளுக்கு பிறந்த மகன் ஆவார். பெரிய கவுண்டர் மற்றும் கோவிந்தராஜ் இருவருமே ஆடு வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தார்களா என்றால் இல்லை, கோவிந்தராஜ் மட்டும் தான் செய்து வந்தார், பெரிய கவுண்டருக்கு சிறு வயதிலிருந்தே மனநலம் சரியில்லை. கோவிந்தராஜ் வீட்டிலேயே மாரடைப்பு ஏற்பட்டு வீட்டிலேயே இறந்துவிட்டார். அவரை மருத்துவமனைக்கு ஏதேனும் அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. சண்முகம்

கோவிந்தராஜிக்கு திருமணம் ஆவதற்கு முன்னதாகவே 1 ஏக்கர் நிலம் பிரித்து கொடுத்துவிட்டார், அதில் தான் கோவிந்தராஜ் வீடு கட்டி குடியிருந்து, விவசாயமும் செய்து வந்தார். எந்த தேதியில் பிரித்து கொடுத்தார்கள் என்று குறிப்பாக தெரியுமா என்றால் தெரியாது. கோவிந்தராஜ் ஆனந்தனின் மகன்கள் பெருமாள் மற்றும் பெரியாகவுண்டர் ஆகியோரிடம் அ வருக்கு பிரிந்து 1 ஏக்கர் பாக நிலத்தை அடமானம் வைத்திருந்தார். அந்த நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் அடமானம் வைத்தார்கள் என்று குறிப்பாக தெரியுமா என்றால் தெரியாது.

3) கோவிந்தராஜ் எந்த தேதியில் இறந்தார் என்றால் 10.05.1992 ல் இறந்துவிட்டார். மேற்கண்ட அடமானம் குறித்து ஏதேனும் பத்திரம் எழுதப்பட்டதா என்றால் எழுதப்பப்டடது, ரூ.7,000/—க்காக பெருமாள் மற்றும் பெரியா கவுண்டருக்கு எழுதப்பட்டது. அந்த அடமானம் சுவாதீனத்துடன் கூடிய அடமானமா அல்லது சுவாதீனம் இல்லாத அடமானமா என்றால் சுவாதீனத்துடன் கூடிய அடமானம் தான் வைத்தார். அந்த தொகைக்கு வட்டி ஏதேனும் பேசப்பட்டதா என்றால் வட்டி எதுவும் இல்லை. வருடம் எதுவும் முடிவு செய்யவில்லை, தொகை திருப்பி கொடுத்தபோது சுவாதீனம் ஒப்படைக்கவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

4) மேற்படி அடமானத்தை இந்திராணி மீட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் அருள்குமாருக்கு என்ன வயது என்றால் சுமார் 20 வயது இருக்கும். இந்திராணி ஏதேனும் அந்த சமயத்தில் வேலைக்கு சென்றிருந்தாரா என்றால் காட்டு வேலைக்கு செல்வார். அடமானம் வைத்ததாக சொல்லும் 1 ஏக்கர் நிலத்தை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதன் சர்வே எண் எனக்கு தெரியாது அதன் சக்குபந்திகள் கான்கிரீட் ரோட்டிற்கு கிழக்கு, குப்புசாமி நிலத்திற்கு வடக்கு, பெருமாள் நிலத்திற்கு தெற்கு, கவுண்டப்பன் நிலத்திற்கு மேற்கு ஆகும். இதன் மத்தியில் தான் 1 ஏக்கர் நிலம் உள்ளதா என்றால் ஆமாம்.

5) பிரதிவாதி இந்திராணி எவ்வளவு தொகை செலுத்தி அடமானத்தை மீட்டார் என்றால் ரூ.7,000/— செலுத்தி மீட்டார். எந்த தேதியில் மீட்டார் என்றால் தேதி குறிப்பாக

தெரியவில்லை. பிரதிவாதி இந்திராணியின் அனுபவத்தை யார் தொந்தரவு செய்தார்கள் என்றால் சண்முகம், வெள்ளையம்மாள், சந்திரசேகர், குணசேகர், பெருமாயி ஆகியோர்கள் தொந்தரவு செய்தார்கள். அவர்களது தந்தை உயில் எழுதி வைத்துள்ளதாகவும், அதனால் நிலத்தை காலி செய்யவேண்டும் என்று இந்திராணியிடம் பிரச்சனை செய்தார்கள், எந்த தேதியில் பிரச்சனை செய்தார்கள் என்று குறிப்பாக தெரியுமா என்றால் தெரியாது. இது தொடர்பாக நான் பஞ்சாயத்து ஏதேனும் செய்து வைத்தேனா என்றால் யாரும் பஞ்சாயத்து பேச வரவில்லை, இரு தரப்பினர்களும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டார்கள்.

6) சண்முகத்திற்கு மொத்தம் எவ்வளவு ஏக்கர் நிலம் சீராமணியூரில் உள்ளது என்றால் 2.20 ஏக்கர் நிலம் உள்ளது. அது முழுவதுமே விவசாய நிலமா என்றால் ஆமாம்.வழக்கு சண்முகத்தின் மகன்கள், வெள்ளையம்மாள், பெருமாயி ஆகியோகள் உயில் எழுதியது சம்மந்தமாக தாக்கல் செய்ததாக தெரிந்து கொண்டேன். எனக்கு தெரிந்து ஒரு வழக்கு தான் தாக்கல் செய்துள்ளார்கள். சண்முகம் 2008 ல் இறந்துவிட்டார், தேதி, மாதம் குறிப்பாக தெரியவில்லை. சண்முகம் வயது முதிர்வு காரணமாக இறந்துவிட்டார். சண்முகம் இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். வாதி சந்திரசேகர்மற்றும் அவரது குடும்பத்தார் தான் சண்முகத்தின் இறுதி சடங்குகள் அனைத்தையும் பார்த்துகொண்டார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை.

7) மோசடியாக உயில் தயார் செய்யப்பட்டதாக நான் சொல்லியுள்ள விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சண்முகத்திற்கு உடல் நிலை சரியில்லை என்று சேலம் மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக கூறி, ஓமலூரில உயில் பதிவு செய்து விட்டதாக அவர் இறப்பு சமயத்தில் இறுதி சடங்கிற்கு வந்தவர்கள் பேசி கொண்டார்கள். மேச்சேரியிலேயே உயில் பதிவு செய்யலாம் ஓமலூரில் பதிவு செய்யவேண்டி அவசியம் இல்லை என்று சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியில்லை. கோவிந்தராஜின் மீது சண்முகம் பாசமாக இருந்தாரா என்றால் இருந்தார். கோவிந்தராஜிக்கு தொழில் தொடங்குவதற்கும், வீடு கட்டுவதற்கும், திருமணம் செய்து கொள்வதற்கும் அனைத்து செலவுகளையும் சண்முகம் தான் பார்த்து கொண்டார்

என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் எத்தனை வயதிலிருந்து வேலைக்கு சென்றார் என்றால் 15 வயதிலிருந்தே சென்றார்.

8) கோவிந்தராஜ் முதன் முதலில் ஆடு வாங்கி தொழில் செய்ய அவருக்கு பணம் எவ்வாறு கிடைத்தது என்றால் முதலில் 1, 2 ஆடுகள் தான் வாங்கி விற்றார், அது யாரிடமாவது வாங்கியிருக்கலாம். சண்முகம் சொத்து முழுவதும் வெள்ளையம்மாள் வகையறாவிற்கு எழுதி வைக்கவில்லை என்ற விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அதற்கு முன்பே 1 ஏக்கர் நிலத்தை கோவிந்தராஜிக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டார். அந்த விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் திருமணத்திற்கு முன்பே 1 ஏக்கர் நிலம் கொடுத்துவிட்டதாகவும், பிரதிவாதி இந்திராணி எனது உறவினர் பெண் என்பதால் திருமணத்திற்கு சிபாரிசு செய்யுமாறு சண்முகம் என்னிடம் சொல்லியிருந்தார்.

9) சண்முகத்தின் பேரிலுள்ள சொத்துக்கள் அனைத்தும் தற்போது வரை சண்முகத்தின் பெயரில் தான் உள்ளது. சண்முகம் எந்த காலத்திலும் கோவிந்தராஜிக்கு நிலம் பிரித்து கொடுக்கவில்லை என்றும், நான் பிரதிவாதி இந்திராணிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரித்து கொடுத்திருந்தால் நத்தம் நிலவரி திட்டத்தின்போது அதிலிருந்த வீடு கோவிந்தராஜ் பெயரில் வந்திருக்கும் என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் எழுதி வைத்ததாக சொல்லப்படும் அடமானப்பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், கோவிந்தராஜ் மற்றும் சண்முகம் சேர்ந்து தான் அடமானம் வைத்தார்கள். அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. அதில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அதை நான் கவனிக்கவில்லை.

10) அடமான பத்திரம் குறித்து எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் கோவிந்தராஜ் சொல்லி தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 பத்திரத்தில் சண்முகம் மகன் கோவிந்தராஜ் மட்டும் தான் எழுதி கொடுத்ததாக உள்ளது என்றால்

சரிதான். சண்முகம் கோவிந்தராஜிக்கு நிலம் பிரித்து கொடுத்ததாக சொல்வதும், அதை அவர் அடமானம் வைத்ததாகவும், அந்த அடமானத்தை மீட்டதாக சொல்வது அனைத்தும் 1ம் பிரதிவாதி இந்திராணிக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இந்திராணி 2வது திருமணம் செய்து கொண்டாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி இந்திராணிக்கு 25 வயதில் ஸ்ரீநிதி என்ற பெண் பிள்ளை உள்ளது என்றால் சரியல்ல. சண்முகம் எழுதி வைத்த உயிலை பார்த்துள்ளேனா என்றால் இல்லை, அது பற்றி சொல்லியுள்ளார்கள்.

11) வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் சண்முகம் எழுதி வைத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதில் 3வது பக்கத்தில் தன் மகன் கோவிந்தராஜின் மனைவி இந்திராணி நடத்தை சரியில்லை என்றும், அவருக்கு 1வயதில் பெண் குழந்தை உள்ளது என்றும், அதனால் தான் உயிலில் பாகம் ஒதுக்கப்படவில்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது பொய்யான விவரம் ஆகும். சண்முகத்திற்கு பாத்தியப்பட்ட 2.20ஏக்கர் நிலம் எத்தனை பாகமாக உள்ளது என்றால் மேற்கில் ஒரு பாகமும், கிழக்கில் ஒரு பாகமும் உள்ளது. வழக்கு என்னவென்றே தெரியாமல் பிரதிவாதி இந்திராணிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.